ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2238/30 - 2021 ජූලි මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.07.29

*2238/30 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

**மதுவரி அறிவித்தல்**

*திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் கீழ் நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 ஆந் திகதிய 2054/41 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 03/2018 ஆம் இலக்க, மதுவரி அறிவித்தலின் அட்டவணையில் இல. 2 இல் குறிப்பிடப்பட்ட கள்ளுத் தவறணைகளின் விற்பனை நேரங்கள் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விற்பனை நேரங்களைக் கொண்டு திருத்தியமைக்கப்படுவதற்காக 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப் பெறும் வகையில், 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதிய 2209/44 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் மதுவரி அறிவித்தல் இல. 04/2021 என்பதாக வெளியிடப்பட்ட பின்வரும் கட்டளை 2021 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

**எஸ். ஆர். ஆட்டிகல,**
செயலாளர்,
*நிதி அமைச்சு.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு,*
*2021, யூலை 29.*

1A - G 34764 — 35 (2021/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| | நிரல் I<br>உரிம வகை | நிரல் II<br>திறந்திருக்க வேண்டிய நேரங்கள் |
|---|---|---|
| | (i) கள்ளுத் தவறணைகள் | மு. ப. 10.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை<br>மற்றும்<br>பி. ப. 5.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை |
| 2. | (ii) கள்ளுத் தவறணைகள் (கூட்டுறவு முறைமையின் கீழ் செயற்படுகின்ற) | மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 9.00 மணி வரை |

02. பொருள்கோடல் : ''கூட்டுறவு முறையின் கீழ்'' என்பது, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கொத்தணிகளைக் குறிக்கும்.

08-206

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.